(உ) உலக வங்கியின் உதவி பெறுவதற்காக இந்திய அரசின் ஆலோசனையிலே இருந்து வரும் பல திட்டங்களில் இது ஒன்றாகும். இந்திய அரசினால் இது முடிவாகத் தெரிந்தெடுக்கப்படின் உலக வங்கியின் உதவி பெறுவதற்காக அது இந்திய அரசினால் பரிந்துரைக்கப்படும்.

(எ) சாலைகள் குறித்த அதிகாரம் இந்திய அரசிடம் நிலை பெற்றுள்ளது. எனவே, இச்செலவை மாநில அரசு பகிர்ந்து கொள்வது குறித்த வினா எழாது.

Dr. H. V. HANDE : From the answer of Hon. Minister for Public Works it looks as though it may take a long time before we are able to realise from three dimension what the Central Government would offer us or promise to offer to us. In view of the possibility of long delay, will the Government see to it that this national highway work is immediately taken up and the present defects rectified and the highway made fit for heavy traffic. There is at present heavy traffic to Coimbatore from Hosur and Krishnagiri. In view of this, will the Government start the work and see to it that it prevails upon the Central Government afterwards and see that the expenditure is debited to Central account later on?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாநில அரசைப் பொறுத்தவரையில், செய்ய வேண்டிய எல்லா வேலைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காருக்கு உலக வங்கியிலிருந்து உதவி வரக் கூடிய குறிப்பு இருக்கிறது. மத்திய சர்க்காரையும் நாம் வற்புறுத்தியிருக்கிறோம். டெல்லிக்குச் சென்ற போது, மத்திய அமைச்சரோடு தொடர்பு கொண்டு கூறப்பட்டிருக்கிறது. இதில், மாநில அரசுக்கு உள்ள அதிகாரம் இல்லை, மத்திய சர்க்காரின் அதிகாரம்தான்.

திருமயம் தொகுதியில் அணைக்கட்டு

*23 வினா **புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு போதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருமயம் தொகுதியில் கூடலூர் ஆறும், வெள்ளாறும் சந்திக்குமிடத்தில் பேரணை எழுப்பும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இருப்பின் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

1970 ஆகஸ்ட் 25]

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் பகுதியில் கூடலூர் ஆறும், வெள்ளாறும் சந்திக்கும் இடத்தில் பேரணை கட்ட வேண்டும் என்று ஆங்கிலேயர் காலத்திலேயே ஆய்வு செய்யப்பட்டது. நம்முடைய அரசு அதை ஆய்வு செய்ய முயலுமா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆங்கிலேயர் காலத்தைப்பற்றித் தெரியாது. வெள்ளாறு, நெரிஞ்சிக்குடி ஆறு இவற்றிற்கு மேல் ஒரு மைல் தூரத்தில் அணை கட்டும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. ஆற்றில் நீரின் அளவு குறைவு. பாசனத்திற்கு பற்றுக்குறை ஏற்படும் என்பதால் அதை மேற்கொள்ள முடியவில்லை.

லட்சுமணம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக் கட்டடம்

* 24 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், லட்சுமணம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிக்கு கட்டடம் கட்ட தீர்மானிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்போது தீர்மானிக்கப்பட்டது?

(உ) தற்போது எந்த நிலைமையில் இருந்து வருகிறது?

(எ) காலதாமதம் ஏற்படுவதற்குரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம். தீர்மானிக்கப்பட்டது.

(இ) 25—11—1967.

(உ) தற்போது கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

(எ) கட்டடம் கட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவுசெய்த பின்பும் கட்டடம் கட்டும் இடம் பற்றி எழுப்பப்பட்ட ஆட்சேபனையினால் கட்டடம் கட்டும் வேலை தாமதிக்கப்பட்டது.

Greater Madurai Scheme

* 25 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Greater Madurai Scheme and the scheme regarding the inclusion of some areas of Madakulam Panchayat in the Madurai Municipality was deferred by the Government of Tamil Nadu; and

(b) if so, the reasons for the same?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:

(அ) ஆம்.